**தலைப்பு 212 – பரீட்சைகள் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பரீட்சைகள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பரீட்சைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 05 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பரீட்சைகள் திணைக்களத்தின வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 06 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 ஆந் திகதிய பரீட்சைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள் , செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் , சம்பவங்கள் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் சென்ற ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியல்லா சொத்துக்கள் மீதான கூற்றில் 07 சொத்துக்கள் தொடர்பாக சென்ற வருட இறுதி மீதிகள் மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி இடையில் ரூபா 118,280,504 க்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | உடன்படப்படுகிறது. | வேறுபாடுகளுக் கான காரணத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) அச்சக பிரிவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 546,264,452 பெறுமதி வாய்ந்த டர்ன் கீ அச்சு இயந்திரம் நிதியல்லா சொத்துக்கள் மீதான கூற்றில் பதியப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கிலிடப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 செலவின விடயங்களுக்கான ரூபா 129,600,000 மொத்த ஒதுக்கீடும் சேமிக்கப் பட்டிருந்தது. | 2020 வருடாந்த வரவு செலவு திட்ட ஆரம்ப கட்டத்தில் ஒதுக்கீடு ஒதுக்கப்படாததுடன் இடைக்கால நிறைவுறு கணக்கின் கீழ் காலாண்டு நிதியாக ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டது. | முறையான கற்றலின் பின்னர் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

### 2.2 நிலுவை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலுவை பரீட்சை வருமான மீதியான ரூபா 1,509,792 உள் 2018 மற்றும் 2019 ஆண்டுகளுடன் தொடர்புடைய 834,813 உட்பட்டிருந்தது. | உடன்படப்படுகிறது. | நிலுவை வருமானங்களை சேகரித்துக் கொள்ளப்பட வேண்டும். |

### 2.3 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 திகதிக்கு 04 வைப்புக் கணக்குகளில் ரூபா 67,677,090 மீதியினுள் 2-5 வருடங்கள் இடையேயான காலத்திற்கு தொடர்புள்ள ரூபா 4,974,354 க்கான மீதிகள் உட்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | உடன்படப்படுகிறது. | வைப்பு மீதிகளை தீர்ந்து வைப்பதற்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் . |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2017 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் 255/2017 கொண்ட பொதுக் கணக்கு சுற்றறிக்கையின் 2(ஈ) பிரகாரம் நிதி ஆண்டுக்குரிய சகல் பொறுப்புக்களும் அந்நிதி ஆண்டிற்குள் முடிக்கப்பட வேண்டியதுடன் எவ்வித பொறுப்புக்களும் அடுத்த வருடம் தீர்த்து வைப்பதற்காக முன்கொண்டு செல்லப் படக்கூடாதிருந்த போதிலும் மீளாய்வாண்டு தொடர்பில் ரூபா 13,173,163 க்கான இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 2021 வருடம் தீர்த்து வைக்கப்பட்டிருந்தன. | பதியப்பட்டுள்ளது | யாதொரு நிதியாண்டு தொடர்பான சகல பொறுப்புக்களும் அந் நிதியாண்டிற்குள் தீர்த்துவைக்கப் படவேண்டியமை |
| (ஆ) 03 உத்தியோக பூர்வ இல்லங்களை கொள்வனவு செய்தல் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 17,820,562 மீளாய்வாண்டின் பொறுப்புக்களில் பதியப்பட்டிருக்கவில்லை. | தவறியுள்ளது | பொறுப்புக்கான ஆவணத்தில் பதியப்பட வேண்டும். |

## 2.5 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 94(i) | 08 செலவின விடயங் களுக்காக சேமிகப்பினை விஞ்சி ரூபா 10,157,120 பொறுப்புக்களுக்கான இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. | 2020 வருடத்தில் ஒதுக்கீடுகள் காலாண்டு அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. காலாண்டு இறுதியில் இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டு இருந்தாலும் பணம் செலுத்தப்படாது இருப்பின் ஒதுக்கீடுகள் இரத்தாகும் தன்மை. | ஒதுக்கீடுகள் இருப்பின் மாத்திரம் இணக்க ங்களை ஏற்படுத்திக் கொள்ளல். |
| (ஆ) | 1968 இலக்கம் 25 கொண்ட பொதுப் பரீட்சை சட்ட மூலத்தின் 6(1) பிரிவின் பிரகாரம் | பொதுப் பரீட்சையொன்றில் வினா பத்திரத்திற்கு விடை வழங்கல் ஆரம்பிக்கப்படும் நேரத்தில் இருந்து அரை மணத்தியாலம் செல்லும் வரை இரகசிய ஆவணமாக இருப்பினும் பகல் நேரம் சகல வெளிவாரி தரப்பினருக்கும் வெளிப்படை யாகும். க.பொ.த (சாதாரண) மற்றும் (உயர் தர) வினாப் பத்திரங்களை அந்நாளன்று இரவு நேரம் இன்னொரு பரீட்சாத்திகள் தரப்பினருக்கு விடை வழங்குவதற்கு பெற்றுக் கொடுக்கப் பட்டிருந்தது. | பரீட்சார்த்திகள் பரீட்சை நாளன்று மு.ப. 8.00 மணியிலிந்து பரீட்சைத் திணைக்கள பணிக் குழாமின் மேற்பார்வையின் கீழ் தடுத்து வைக்கப் படுவதனால் வெளிச் சமூகத்திற்கு வெளிப்படை யாகாமை. | சட்டமூலத்தின பிரகாரம் செயற்பட வேண்டியமை |

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவன பணிப்பாளர் தலைமை அதிபதியின் இலக்கம் EST/07/EXAMS/05/2018 மற்றும் 2019 ஒக்டோபர் 03 திகதிய கடிதத்தில் பொது பரீட்சை செயற்பாடுகளில் பங்குபற்றும் அதிகாரிகளுக்கு 2019 ஒக்டோபர் 03 ஆந்திகதி முதல் எதிர்வரும் 05 வருட காலத்திற்கு தொடர்புபடுத்திக் கொள்ளும் பொருட்டான நிபந்தனைகளுக்கு இணங்க கட்டணங்கள் திருத்தப்பட்டிருந்தன. அவ்வாறாயினும் அங்கீகரிக்கப்பட்ட திருத்த பரீட்சை கட்டணங்கள் செலுத்துவதற்கான பரிந்துரைகள் 2020 திசெம்பர் 31 திகதி வரையிலும் செயற்படுத்தாது பழைய கட்டண புத்தகத்தின்படி செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | இந்திருத்தத்தின் போது 2013 செலுத்தல் பட்டியலில் உட்பட்டிருந்த சில கொடுப்பனவுகள் குறைந்தும் இன்னும் சில கொடுப்பனவுகள் நீங்கியும் இருந்தமையின காரணமாக அது தொடர்பாக மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது. இம் மேல் முறையீட்டிற்த நிறுவன பணிப்பாளர் தலைமை அதிபதியிடமிருந்து பதில் கிடைக்கும் வரையில் 2013 கட்டண பட்டியலின் படி செலுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | திருத்தப்பட்ட செலுத்தல் களுக்கான பரிந்துரைகளின் படி பரீட்சை கடமைகளுக்கான கட்டணங்கள் செலுத்தல |
| (ஆ) | புது கட்டண புத்தகத்திற்கு அமைவாக இரகசிய ஆவண அலுவல்களுக்காக வழங்கப்படும் மாதாந்த இரகசிய கொடுப்பனவு வருடத்திற்த ஆகக் கூடியது 06 மாதங்களுக்கு ஆயினும் 12 மாதங்களுக்காக ரூபா 628,456 செலுத்தப்பட்டிருந்தது. | கூடுதலாக வழங்கப்பட்ட பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அறவிடப் படுவதற்கு நடவடிக்தை மேற்கொள்ளப்பட வேண்டியமை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பிரதான அலுவல்களுக்கு முரணான செயற்பாடுகள்

ஒரு வெளிவாரி தரப்பினரின் வேண்டுகோளின் படி ஏதோவொரு மதத்தாபனத்திற்கு உரிய மாணவர் சொற்பப் பேருக்கு மாத்திரம் புனித "சபத்'' நாளாகக் கருதப்படும் (சனிக்கிழமை) நாட்களில் பகல் நேரம் மத அனுஷ்டானங்களில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பத்தினை பெற்றுக் கொடுக்கப்பட்டு க.பொ.த. (சாதாரண) மற்றும் க.பொ.த (உயர்தர) பரீட்சைகளில் சனிக்கிழமை உள்ள பாடங்களுக்கு அந்நாளன்று இரவு நேரம் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக கீழ்காணும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விடயப் பொறுப்பான அமைச்சர் அவர்களிடம் அல்லது கோடு அமைச்சின் செயலாளரிடம் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது அறிவுறுத்துவதற்கு செயற்படாது சட்டரீதியான ஒதுக்கீடு இல்லாத புனித "சபத்'' நாளன்று பரீட்சை நடாத்துவது 50 வருட காலமாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தது. | கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விசாரிப்பின் பின்னர் பரீட்சையினை நடத்துவதை நிறுத்தும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தமை. | பரீட்சை சட்டமூலம் மற்றும் திணைக்கள சட்ட ஒழுங்கின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |
| (ஆ) | மீளாய்வாண்டில் க.பொ.த (சாதாரணதர) விஞ்ஞான பாடத்திற்குரிய வினாப்பத்திரங்கள் மற்றும் விடைப்பத்திரங்கள் மண்டபாதிபதியினால் பரீட்சையினை நடாத்தும்படி கோரப்பட்ட நிலையத்திற் குரிய வாகனத்தில் கொண்டுவரப்பட்டன. | முன்பு தொட்டு பரீட்சையினை நடத்தும்படி கோரப்பட்ட நிலையத்தினால் போக்குவரத்திற்காக வாகனமொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 பெப்ரவரி 11 திகதிய 6/6 சா.த,2020 DP/OL/2020/08 கொண்ட மண்டபாதிபதிக்குரிய விசேட அறிவுறுத்தல் கடிதம் மூலம் எவ்வித வெளிநபரும் பரீட்சை மத்திய நிலையத்தினுள் இருக்கப்படாதாயினும் கணினியினை பயன்படுத்தி மாணவர்களுக்கு மதம் சம்பந்தமான காட்சிகளை காட்டுவதற்காக தரித்திருப்பதற்கு மண்டபாதிபதியினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | மதம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியில் செயலாற்றிய நபர் தரிந்து நின்றது பரீட்சை மத்திய நிலையத்தில் அல்லாது மாணவர்களை தற்காலிகமாக தரித்து வைக்கப்பட்டிருந்த மன்றில் பரீட்சை குழாமின் நேரடி மேற்பார்வையின் கீழ் ஆகும். | -மேற்படி-. |
| (ஈ) | இந்த பரீட்சை கடமைகளில் ஈடுபட்ட திணைக்கள உத்தியோகத்தர்கள் பரீட்சை கடமைக்கான கொடுப்பனவாக திணைக்கள பரீட்சை கட்டண புத்தகத்தில் குறிக்கப்பட்டுள்ள பெறுமதியினை போன்று இரு மடங்கினை வெளி நிறுவனத்திடமிருந்து தனிப்பட்ட முறையில் பெற்றிருப்பது தெரியவந்துள்ளது. | பகல் இரவென இருபொழுதிலும் பரீட்சை கடமைகளில் ஈடுபட வேண்டி உள்ளதால் இரு மடங்குப் பணம் நேரடியாக 1982 இல் இருந்து வழங்கப்பட்டமை. | -மேற்படி-. |
| (உ) | சென்ற ஆண்டு ‘‘சபத்’’ புனித தினமன்று க.பொ.த. (சாதாரண) மற்றும் க.பொ.த (உயர்தர) பரீட்சைகள் நடாத்தப்பட்டது தொடர்பான இலக்கம் 19/1A/EX/05 கொண்ட விசேட உள்ளத கணக்காய்வு அறிக்கையை 2019 சனவாரி 16 திகதி பரீட்சை ஆணையாளர் தலைமை அதிபதியிடன் கையனிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த விசாரணை அறிக்கையினை பரீசிப்பு மேற்கொள்ளப்பட்டு தேவையான திருத்தங்கள் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை. | விசாரணை அறிக்கையின் படி தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

## 3.2 திட்டங்களை நிறைவேற்றுதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 வருடம் நிர்மாணப் பணிகள் ஆரம்பிகப்பட்டு 2019 பெப்ரவரி செய்து முடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா 564,320,835 ஆன ஆறு மாடிகள் கொண்ட பல்லின அலுவல்கள் கொண்ட கட்டிடத்திற்காக மீளாய்வாண்டில் பொறியியல் தொடர்பான செயற்பாட்டிற்கான மத்திய ஆலோசனை பணிவகத்திற்கு ரூபா 28,905,398 மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 280,625,748 வழங்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 திகதி வரையிலும் அதன் நிர்மாணப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | பலவித காரணங்களினால் நிர்மாணப் பணிகள் தாமதமாதி உள்ளன. | ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய தினத்தில் நிர்மாணப் பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியமை. |

## 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 2/2020 கொண்ட பொதுநிதிச் சுற்றறிக்கை 10.2 பந்தியின் பிரகாரம் வரைவுகளை வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை நிதிக் கூற்றுடன் சார்ப்பிக்கப்படாததுடன் 2019 ஆண்டு தொடர்பான அறிக்கையினை 2021 மார்ச் 31 திகதி வரையிலும் கணக்காய்விற்காக முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 மற்றும் 2020 வருடங்களுக்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை தற்போது முடிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அதனை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

**3.4 பெறுகைகள்**

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பரீட்சார்த்திகளின் நம்பிக்கைத் தன்மையினை மேம்படுத்தவும் மற்றும் இரகசியத் தன்மையினை உச்ச நிலையில் பேணி பாதுகாக்கும் நோக்குடன் ரூபா 546,264,452 செலவிடப்பட்டு டர்ன் கீ அச்சு இயந்திரத்தினை கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வு ஆண்டில் க.பொ.த உயர் தர வினாப் பத்திரம் 346,180 மாத்திரம் அச்சடிக்கப் பட்டிருந்தது. அது மொத்த வினாப்பத்திரங்களில் நூற்றுக்கு 5 அளவிலான குறைந்த சத வீதத்தினை கொண்டிருந்தது. | வினாப் பத்திரங்களின் தன்மையின் படி பூர்ண கொள்ளளவில் பாவனை செய்வது கடினமாக இருந்தமை. | அச்சு இயந்திரத்தை கொள்வனவு செய்ததன் நோக்கினை நிறைவேற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | வினாப் பத்திரங்களின் இரகசியத் தன்மையினை பேணிப் பாதுகாப்பதற்காக ரூபா 8,428,637 பெறுமதி வாய்ந்த டர்ன் கீ அச்சு இயந்திரத்தின் Wrapping Solution பகுதியினை 2018 வருடம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் எந்தவித பாவனையயும் செய்யப்படாது கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட நாள்முதல் செயற்படுத்தப்படாது இருந்தது. | உடன்படுகிறேன். | துரிதமாக சொத்தினை பிரயோசனப் படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| (இ) அச்சுப்பொறியில் ஏற்படக் கூடிய திடீர் மின் தடையின் போது அச்சு முறைமையினை செயல் இழக்கும் வரையில் (Shutdown) மின்வழங்கலை பேணிச் செல்வதற்காக ரூபா 7,096,000 கிரயத்திலான கி.வொ.160 இலான "தொடர்வழு வழங்கும் அலகி"னை கொள்வனவு செய்யப்பட்டு சுமார் 02 வருட காலம் கழிந்ததன் பின்னர் அதற்கான UPS பகுதியினை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின்படி கொள்வனயின் போது விரித்துரையின் இத்தேவைப்பாட்டினை கவனத்தில் கொள்ளாமையினால் ரூபா 7 மில்லியனுக்கு அதிக தொகையினை மேலதிகமாக செலவிட நேர்ந்துள்ளது. | இருந்த நிலைமையினை காட்டப்பட்டது. | பெறுகை வழிகாட்டலுக்கு அமைய செயற்பட வேண்டியமை. |

**3.5 இழப்புக்களும் சேதங்களும்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேத அட்டவணையில் பதிந்துள்ள ரூபா 616,740 க்கான 03 விபத்துக்கள் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப் பட்டுவருகிறது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டியமை. |

## 3.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களம் அமைத்துள்ள காணியின் மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 630,000,000 நிகியல்லா சொத்துக்களுக்கான கூற்றில் காட்டப்பட்டிருந்த போதிலும் அக்காணியினை திணைக்களம் கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக கல்வி அமைச்சினை அறிவுறுத்தப்பட்டுள்ளமை. | கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளமை. |
| (ஆ) | 2018 வருடம் ரூபா 28,500,000 செலவிடப்பட்டு தாபிக்கப் பட்டிருந்த சூரிய பல வழு முறைமையின் தயாரிப்புக் கொள்வனவு மற்றும் பாவனை மீதான தெளிவின்மையினால் நியமிக்கப்பட்ட திணைக்கள குழுவின் 2018 ஒக்டோபர் 08 திகதிய முடிவின் படி மொத்த மின்சக்தி தயாரிப்பினை மின்சார சபைக்கு விற்பனை செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் மீளாய்வு ஆண்டு இறுதி வரையிலும் அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அது தொடர்பாக கற்கப்பட்டு வருகின்றமை. | குழு முடிவின் படி செயற்பட வேண்டியமை |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வு ஆண்டில் 03 உத்தியோக பூர்வ இல்லங்களை கொள்வனவு செய்வதற்காக 2020 மற்றும் 2021 வருடங்களில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 31,700,936 மீளாய்வு ஆண்டு இறுதி வரையிலும் செலுத்தப் பட்டிருக்கவில்லை. உரிய தினங்களில் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் செலுத்தல்களிலிருந்து நூற்றுக்கு 25 நிறுத்திவைக்கப்பட்டு ஒதுக்கலினை இரத்துச் செய்வதற்கு அல்லது வீடமைப்பு அபிவிருந்தி அதிகார சபையினால் தீர்மானிக்கப்படும் தாமதக்கட்டணத்தினை நூற்றுக்கு 12 சதவீத வருடாந்த வட்டியுடன் செலுத்த நேரும் என்பதனை ஒப்பந்த நிபந்தனை 1.1 (B) இல் குறிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | திறைசேரியினை அறிவுறுத்தப்பட்டுள்ளமை. | ஒப்பந்த நிபந்தனைகளின் படி செயற்பட வேண்டியமை. |
| (ஈ) | மாணவர்களின் நடைமுறை அனுபவங்கள் மற்றும் செயற்பாடுகளை அளந்து பார்க்கும் நோக்குடன் மெய் நிகர வழி ஊடாக 2018 வருடம் நடாத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப (GIT)பரீட்சை பெறுபேறுகள் 2021 மார்ச் 31 ஆந் திகதி வரைக்கும் பெற்றுக் கொடுப்பதற்கு திணைக்களத்திற்கு இயலாது போய் இருந்தது. அதேவேளை அதற்காக 2019, 2020 மற்றும் 2021 வருடங்களில் ரூபா | பரீட்சை பெறுபேறுகள் தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்பட்டு வருகிறமை, | பெறுபேறுகளை துரிதமாக வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | 128,359,865 க்கான செலவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (உ) | 1992 வருடம் முதற்கொண்டு நடாத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேற்று சான்றிதழ்கள் கணனி முறைமையின் ஊடாக வழங்கப்படுவதாயினும் 1992 ஆம் வருடத்திற்கு முன்னதாக நடாத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகளை அவ்வாறு வழங்குவதற்கான நடவடிக்கையினை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 யூன் வரையிலும் பெறுபேறுகளை வழங்குவதற்கு மற்றும் உறுதிப்படுத்துவதற்கு முடியாது போய் இருந்தது. | சான்றுகளை மீளாய்வு செய்வதற்கான திட்டத்தின் செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயும் எதிர்காலத்தில் பெறுபேறுகளை உறுதிப்படுத்தல் மற்றும் மீண்டும் பெறுபேறுகளை வழங்குவதை துரிதமாக மேற்கொள்வதற்கு முடியுமாகும். | நிகழ்நிலை வழிமுறையில் பெறுபேறுகள் வழக்குவதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமயா சமய அடிப்படையின் கீழ் சேவை புரிந்த 82 பேருக்கு 2020 பெப்ரவரி 20 திககி அலுவலக சிற்றூழியர் சேவையில் 111 ஆம் தரத்திலான நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுக்கப்பட்டு ஆரம்ப தரத்திற்கு உட்படுத்தப்பட்டு 06 மாதத்திற்கான நிரந்தர சம்பளம் கொடுக்கப்பட்டு இருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஒன்றிணைந்த சேவை பணிப்பாளர் தலைமை அதிபதியின் கா.சே.சே/v16/பொ.நி.சு/29/2019 மற்றும் 2021.02.18 திகதிய கடிதத்தின் அறிவுறுத்தலின் படி தற்காலிக நியமனக் கடிதங்கள் பெற்றுக் கொடுத்த போதிலும் 2021-02-21 திககிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 01/2020 படி ஆட்சேர்ப்பினை இடைநிறுத்தப்பட்டுள்ளமை. | வழங்கப்பட்ட தொகையினை அறவிடுவதற்கு செயற்படவேண்டிய மை. |

| | | | |
|---|---|---|---|
| | அவர்களுள் சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ள 06 பேருக்கு வழங்கப்பட்ட ரூபா 553,381 தொகையினை மீள அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2021 வருடம் சமயாகமய அடிப்படையின் கீழ 15 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது. | பரீட்சைகள் நிகழ்த்தப்படும் காலத்தினுள் பாரிய நடவடிக்கை செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதனால் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளப்பட வேண்டியமை. | அங்கிகரிக்கப்பட்ட எண்ணிக்கை யினை விஞ்சப்படாது ஆட்சேர்ப்பு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வு ஆண்டு இறுதியில் நிலவும் 152 வெற்றிடங்களுள் சிரேஷ்ட தரத்திலான 12 வெற்றிடங்கள் மற்றும் முன்றாம் தரத்திலான 12 வெற்றிடங்கள் இருந்தன. | தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | தேவையைக் கருத்திற் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவகற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |